## அலகு - 6




# தகவல் செயலாக்கம்




## 6.1 முறையான பட்டியல்

### அனைத்து வழிகளையும் பட்டியலிடுதல்

கவின் சுற்றுலாவில் அணிய 2 கால் சட்டைகள் மற்றும் 3 மேல் சட்டைகளையும் எடுத்து சென்றான். அவற்றை அணியாக கூடிய அனைத்து வாய்ப்புகளையும் பட்டியலிடுக

4XHULD

**எடுத்துக்காட்டு:**




படம் 1–ல் கொடுத்திருப்பது போல் , அதில் 1 சட்டை மட்டும் 2 கால் சட்டைகளை அணிய வழிகள் உள்ளன.

இதே போன்று மீதமுள்ள 2 சட்டைகளை கால் சட்டைகளுடன் படம் 2 மற்றும் 3–ல் இருப்பதுபோல 4 வழிகளில் அணியலாம்.


எனவே 2 கால் சட்டைகளை 3 சட்டைகளுடன் 6 வழிகளில் பட்டியலிடலாம்.



3rd_Unit_06_Information_Term 1.indd 56 2/20/2020 6:39:25 PM

காவியா ஒரு நாளில் 1 பழமும் 1 காய்கறியும் சாப்பிட விரும்புகிறாள் பழங்களில் ஆப்பிளும், ஆரஞ்சும், காய்கறிகளில் கேரட்டும், வெள்ளரியும் உள்ளன. கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் ஒரு பழம் மற்றும் ஒரு காயினை உண்ணும் வழிவகையில் பூர்த்தி செய்க.






| | | | | |
|---|---|---|---|---|
| பழம் | | | | |
| காய் | | | | |


## செயல்பாடு 1

நீலம் மற்றும் சிவப்பு ஆகிய வண்ணங்களை கொண்டு, கொடுக்கப்பட்டுள்ள 4 வில்லைகளை வண்ணம் தீட்டுவதற்கான வாய்ப்புகளையும் கண்டறிக. உங்களுக்காக ஒன்று காண்பிக்கப்பட்டுள்ளது.



## செயல்பாடு 2

கொடுக்கப்பட்டுள்ள வில்லைகளில் உள்ள வெற்றிடத்தை ஒன்று விட்டு ஒன்று மாறுபடுமாறு வண்ணமிட்டு, அதன் அடிப்படையில் பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்க.



1. மொத்த வில்லைகளின் எண்ணிக்கை ◯
2. இளஞ்சிவப்பு வில்லைகளின் எண்ணிக்கை ◯
3. பச்சை வில்லைகளின் ■ எண்ணிக்கை ◯
4. 2 மற்றும் 4ம் வரிசையில் உள்ள இளஞ்சிவப்பு ■ வில்லைகளின் எண்ணிக்கை ◯
5. இளஞ்சிவப்பு ■ வில்லைகளை விட பச்சை ■ வில்லைகள் எவ்வளவு அதிகமாக உள்ளன? ◯



3rd_Unit_06_Information_Term 1.indd 57 2/20/2020 6:39:25 PM

**எடுத்துக்காட்டு:**

4, 5 மற்றும் 7 ஆகிய 3 எண்களை கொண்டு அமைக்கக்கூடிய அனைத்து மூன்றிலக்க எண்களையும் பட்டியலிடுக.

| 457 | 475 | 574 | 547 | 754 | 745 |

**பயிற்சி செய்**

1. கொடுக்கப்பட்டுள்ள இலக்கங்களை ஒரே முறை மட்டும் பயன்படுத்தி அமைக்கக்கூடிய அனைத்து மூன்றிலக்க எண்களையும் பட்டியலிடுக

a. 9,6,8 b. 1, 5, 4 c. 3,2,0

i. 986 968 698 689 896 869

ii.

iii.

2. a, e, t என்ற எழுத்துக்களை ஒரே முறை மட்டும் பயன்படுத்தி இணைக்கக்கூடிய அனைத்து பொருள் தரும் சொற்களையும் கண்டறிக

**எடுத்துக்காட்டு:**

R என்ற ஆங்கில எழுத்தினைக் கொண்டு ஆரம்பிக்கும் 3, 4 மற்றும் 5 எழுத்துக்கள் கொண்ட அனைத்து சொற்களையும் பட்டியலிடுக.

RIGHT RED RING ROSE RAT

ROAD RIVER RUPEE RUN

**மேற்கண்ட வார்த்தைகளை உற்று நோக்கி வினாக்களுக்கு விடையளி**

i. 4 எழுத்துக்கள் கொண்ட சொற்களின் எண்ணிக்கை ________.

ii. 5 எழுத்துக்கள் கொண்ட சொற்களின் எண்ணிக்கை ________.

iii. 3 எழுத்துக்கள் கொண்ட சொற்களின் எண்ணிக்கை ________.



3rd_Unit_06_Information_Term 1.indd 58 2/20/2020 6:39:27 PM

## செயல்பாடு 3

1. R என்ற ஆங்கில எழுத்தினைக் கொண்டு அமைக்கக்கூடிய 3 மற்றும் 4 எழுத்துக்கள் கொண்ட வார்த்தைகளைப் பட்டியலிடுக.
2. ஆங்கிலப் பெயர்களில் 4 எழுத்துக்கள் கொண்ட விலங்குகளின் பெயர்களைப் பட்டியலிடுக.


## 6.2 தகவல் சேகரித்தல் மற்றும் குறிப்பிடுதல்

### விளக்கப்படத்தில் குறித்தல்

தரவுகளை குறிப்பதற்கு படங்களையும் குறியீடுகளையும் பயன்படுத்தலாம். இதனை விளக்கப்படத்தில் குறித்தல் என்கிறோம். தரவுகளை எளிதாக புரிந்து கொள்ள இவை பயன்படுகின்றன.

**எடுத்துக்காட்டு:**

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பார்த்து தேவையான தரவுகளை நிரப்புக.



1. எத்தனை  உள்ளன? 3
2. எத்தனை  உள்ளன? 3
3. அதிக எண்ணிக்கையில் உள்ள விலங்கினை வட்டமிடுக?



4. குறைந்த எண்ணிக்கையில் உள்ள விலங்கினை வட்டமிடுக. 3




5. விலங்குகளின் அதிக மற்றும் குறைந்த எண்ணிக்கைக்கும் இடையேயான வேறுபாட்டினைக் காண்க 17.



3rd_Unit_06_Information_Term 1.indd 59 2/20/2020 6:39:28 PM

## எடுத்துக்காட்டு:

பின்வரும் படம் ஒரு கடையில் விற்பனை செய்யப்பட்ட பழங்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.




மேலுள்ள படத்தினைப் பார்த்து, தேவையான தகவல்களை நிரப்பவும்.

1. அதிகமாக விற்பனை செய்யப்பட்ட பழம் எது? ☐
2. குறைவாக விற்பனை செய்யப்பட்ட பழம் எது? ☐
3. கடையில் விற்பனை செய்யப்பட்ட ஆப்பிள்களின் எண்ணிக்கை ☐
4. கடையில் விற்பனை செய்யப்பட்ட வாழைப்பழங்களின் எண்ணிக்கை ☐
5. விற்பனை செய்யப்பட்ட அன்னாசி மற்றும் ஆரஞ்சு பழங்களின் எண்ணிக்கைகளுக்கு இடையே உள்ள வேறுபாடு ☐

### பயிற்சி செய்

1. உங்கள் பள்ளியில் உள்ள 40 நபர்களின் விருப்ப உணவுகளைப் பற்றி தகவல் சேகரித்து, அவற்றினை விளக்க படத்தில் குறிப்பிடவும்.

| | படங்கள் | மொத்தம் |
|---|---|---|
| இட்லி | | |
| தோசை | | |
| பூரி | | |
| சப்பாத்தி | | |



3rd_Unit_06_Information_Term 1.indd 60 2/20/2020 6:39:28 PM

2. ஒரு வாரத்தில் ஒரு கடையில் விற்பனை செய்யப்பட்ட இனிப்புகளின் எண்ணிக்கை படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

 = 10 இனிப்புகள்

| | |
|---|---|
| திங்கள் |  |
| செவ்வாய் |  |
| புதன் |  |
| வியாழன் |  |
| வெள்ளி |  |
| சனி |  |

**மேலே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகளைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளி:**

i. வியாழக்கிழமை விற்கப்பட்ட இனிப்புகளின் மொத்த எண்ணிக்கை ______

ii. விற்பனை அதிகமாக இருந்த நாள் ______

iii. விற்பனை குறைவாக இருந்த நாள் ______

iv. ______ மற்றும் ______ ஆகிய நாட்களில் விற்பனை சமமாக இருந்தன

v. ஆறு நாட்களில் மொத்தமாக விற்பனை செய்யப்பட்ட இனிப்புகளின் மொத்த எண்ணிக்கை ______

3. உங்கள் பள்ளியில் உள்ள 40 நபர்கள் பள்ளிக்கு வரும் விதம் பற்றி தகவல் சேகரித்து, அவற்றினை விளக்க படத்தில் குறிப்பிடவும்.


| | படம் | மொத்தம் |
|---|---|---|
| நடை பயணம் | | |
| மிதிவண்டி | | |
| மோட்டார்வண்டி | | |
| அரசு பேருந்து | | |
| பள்ளி வாகனம் | | |





3rd_Unit_06_Information_Term 1.indd 61 2/20/2020 6:39:28 PM

## 6.3 குறிப்பிடப்பட்ட தரவுகளில் இருந்து முடிவுகளை அறிதல்

கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் ஒரு பள்ளியில் 1 முதல் 4 வகுப்புகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. 1 முதல் 4 வகுப்புகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை முறையே 14, 10, 16, மற்றும் 13 ஆகும். ஆசிரியருடன் கலந்துரையாடி 1 முதல் 4 வகுப்புகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறித்து வரைபடம் வரைக.




| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| பெண் |  | 14 |
| முதல் வகுப்பு<br>ஆண் | | |
| பெண் |  | 10 |
| இரண்டாம் வகுப்பு<br>ஆண் | | |
| பெண் |  | 16 |
| மூன்றாம் வகுப்பு<br>ஆண் | | |
| பெண் |  | 13 |
| நான்காம் வகுப்பு<br>ஆண் | | |

விளக்க படத்தில் தரவுகளை நிரப்பிய பின்பு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. வகுப்பு 2 இல் உள்ள மாணவிகளின் எண்ணிக்கை_______
2. வகுப்பு 3 இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை_______
3. வகுப்பு 4 இல் உள்ள மொத்த மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை____
4. 1 முதல் 4 வகுப்புகளில் உள்ள மாணவிகளின் எண்ணிக்கை_______
5. 1 முதல் 4 வகுப்புகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை_______
6. அதிக எண்ணிக்கையில் மாணவர்களைக் கொண்ட வகுப்பு____________

GU4PB9

**ஆசிரியர் குறிப்பு:** ஆசிரியர், மாணவர்களுக்கு மற்றவகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையைச் சேகரித்து விளக்கப்படம் வரைய உதவலாம்.



3rd_Unit_06_Information_Term 1.indd 62 2/20/2020 6:39:30 PM